


# பெஞ்சமின் பிராங்களினும்
# வேதாத்திரி மகரிசியும்

அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்

www.banukumar.in

# பெஞ்சமின் பிராங்களினும் வேதாத்திரி மகரிசியும்

பதினெட்டாம் நூற்றாண்டில் அமெரிக்காவில் தோன்றிய **பெஞ்சமின் பிராங்கிளின்** மிகச் சிறந்த சிந்தனையாளர்.

இருபதாம் நூற்றாண்டில் இந்தியாவில் தோன்றிய வேதாத்திரி மகரிசியும் மிகப்பெரிய சிந்தனையாளர்.

**பெஞ்சமின் பிராங்கிளின்** - ஓர் அரசியல் தலைவர் மட்டுமல்ல, ஒரு எழுத்தாளர், அறிவியலாளர், கண்டுபிடிப்பாளர் ஆவார்.

வேதாத்திரி மகரிசி ஒரு ஆன்மீக ஞானி மட்டுமல்ல, சிறந்த தத்துவஞானி, உலக அமைதிக்கு வித்திட்டவர்.

ஆனால் ஒரு வேறுபாடு. பிராங்களின் அரசியல்- தேர்தல் -பதவி என்று வாழ்ந்தார்.

வேதாத்திரி மகரிசியோ அரசியலில் ஈடுபாடு கிடையாது. ஆனால் பொருளாதாரம் முதல் அரசியல் வரை அலசி ஆராய்ந்து மானுடத்திற்குத் தேவையான கருத்துக்களைத் தந்தவர்.

பிராங்கிளின், 1706 பிறந்து 1790 ஆம் ஆண்டு வரை 84 ஆண்டுகள் வாழ்ந்திருந்தார்.

வேதாத்திரி மகரிசி 1911 ஆம் ஆண்டில் பிறந்து 2006 ஆம் ஆண்டுவரை 95 ஆண்டுகள் வரை வாழ்ந்தார்

பெரிய குடும்பம் என்பதால் குடும்ப ஏழ்மையின் காரணமாக பிராங்கிளினை பள்ளிக்கு அனுப்ப இயலவில்லை.

**ஏழை நெசவாளிக்குப் பிறந்த வேதாத்திரி மகரிசி- வறுமையின் காரணமாக மூன்றாம் வகுப்பு வரைதான் படித்தார்.**

பிராங்கிளின் பள்ளிக்கு செல்லாவிட்டாலும் தன் தந்தையின் தொழிலில் உதவி செய்துகொண்டே தனக்குக் கிடைத்த நேரத்தில் அவர் நான்கு மொழிகளைக் கற்றுக்கொண்டார்.

வேதாத்திரி மகரிசியும் தன் தந்தையின் நெசவுத் தொழிலில் உதவி செய்து கொண்டு- ஞான ஆராய்ச்சியில் தன்னை வளர்த்துக் கொண்டார்.

மின்னியலில் இவரின் கண்டுபிடிப்புகளுக்கும், கருத்துக்களுக்குமாக இவர் இயற்பியல் சரித்திரத்தில் ஒரு முக்கியமான அறிவியலாளராகக் கருதப்படுகிறார்.

'புவர் ரிச்சர்ட்ஸ் அல்மனாக்'(Poor Richard's Almanack) என்ற இதழைத் தொடங்கினார்.

மிகவும் மாறுபட்ட பாணியில் வெளிவந்த அந்த இதழ்தான் அவருக்கு செல்வத்தையும், பெரும் புகழையும் கொண்டு வந்து சேர்த்தது.

வேதாத்திரி மகரிசி "அன்பொளி" என்ற மாத இதழைத் தொடங்கினார். இன்றுவரை இந்த இதழ் தமிழிலும் ஆங்கிலத்திலும் வெளிவந்து கொண்டிருக்கிறது.

மின்னியலில் மின்னியலில் இவரின் கண்டுபிடிப்புகளுக்கும், கருத்துக்களுக்குமாக இவர் இயற்பியல் சரித்திரத்தில் ஒரு முக்கியமான அறிவியலாளராகக் கருதப்படுகிறார்.

கண்டுபிடிப்புகளுக்கும், கருத்துக்களுக்குமாக இவர் இயற்பியல் சரித்திரத்தில் ஒரு முக்கியமான அறிவியலாளராகக் கருதப்படுகிறார்.

மின்சாரம் பற்றியும் இடி மின்னல் பற்றியும் புகழ்பெற்ற ஆராய்ச்சிகளை செய்து இடி தாங்கியையும், வெள்ளெழுத்தக் கண்ணாடியையும்(bifocal glasses) மற்ற பல கருவிகளையும் கண்டுபிடித்தவர்.

அரசியலில் சட்டமன்ற உறுப்பினராக, அரசதந்திரியாக, பிரான்சுக்கான தூதராக விளங்கியவர். அமெரிக்க சுதந்திர பிரகடணத்தை தயார் செய்து கையெழுத்திட்ட மூவரில் ஒருவர்.

குறைவான எரி சாதனத்துடன் மிகுந்த வெப்பம் தரக்கூடிய அடுப்பை அவர் கண்டுபிடித்தார்.

1730-ஆம் ஆண்டு நடமாடும் நூல் நிலையம் என்ற அற்புத திட்டத்தை உலகுக்கு அறிமுகம் செய்தார்.

சந்தா முறையில் (subscription) நூல்களை வாங்கி படிக்கும் முறையை உலகுக்கு அறிமுகம் செய்தார்.

சுதந்திரம் அடைந்த பிறகு அமெரிக்கா முதன் முதலாக இரண்டு அஞ்சல் தலையை வெளியிட்டது.

ஒன்றில் அமெரிக்காவின் முதல் அதிபரான ஜார்ஜ் வாஷிங்டனின் படம். மற்றொன்றில் பெஞ்சமின் பிராங்கிளினின் படம் இடம்பெற்றிருந்தது.

வேதாத்திரி மகரிசியின் அஞ்சல் தலையை தமிழக அரசும் சமீபத்தில் வெளியிட்டு மகிழ்ந்தது.

கண்டுபிடிப்புகள் பொதுச்சொத்தே! காப்புரிமை வேண்டாம்.




தன் கண்டுபிடிப்புக்கெல்லாம் பென்ஞ்சமின் பிராங்களின் காப்புரிமை பெற்றதில்லை.

மற்றவர்களின் கண்டுபிடிப்புகளால் நாம் பயன்பெறும்போது நமது கண்டுபிடிப்பால் பிறர் பயன்பெறுவதை நாம் நற்பேறாகக் கருத வேண்டும் என்பதே அவரது எண்ணம்."

பிராங்களினைப் போலவே வேதாத்தரி மகரிசியும் தான் வரையறுத்த ”மனவளக்கலையைப்” பொதுச் சொத்தாக்கினார்.

## **பெஞ்சமின் பிராங்கிளின்** வாழ்க்கை வரலாறு (கி.பி.1706 – 1790)

**பெஞ்சமின் பிராங்கிளின்** (*Benjamin Franklin*; என்பவர் ஐக்கிய அமெரிக்காவை உருவாக்கியவர்களுள் ஒரு மூத்த தலைவர் ஆவார்.

இவர் ஓர் அரசியல் தலைவர் மட்டுமல்ல, ஒரு எழுத்தாளர், அறிவியலாளர், கண்டுபிடிப்பாளர் ஆவார்.

மின்னியலில் இவரின் கண்டுபிடிப்புகளுக்கும், கருத்துக்களுக்குமாக இவர் இயற்பியல் சரித்திரத்தில் ஒரு முக்கியமான அறிவியலாளராகக் கருதப்படுகிறார்.

அமெரிக்க ஆங்கில எழுத்திலக்கணத்திலும் சீர்திருத்த முறைமை அவசியத்தை வலியுறுத்தியவர்.

வணிகம், அறிவியல், இலக்கியம், அரசியல் ஆகிய நான்கு துறைகளில் பெரும் வெற்றி பெற்றவர்;

இளம் வயதில் கையில் ஒரு காசுகூட இல்லாமல் ஏழ்மையில் இருந்தும் அச்சுத்தொழிலின் மூலமும், பத்திரிக்கையின் மூலமும் நாற்பது வயதுக்குள் செல்வந்தரானவர்.

'Poor Richard's Almanack' என்ற புகழ்பெற்ற இதழை உலகுக்குத் தந்தவர்.

உலகின் மிகப்பிரபலமான தன்வரலாற்று நூல்களுள் ஒன்று அவருடையது.

மின்சாரம் பற்றியும் இடி மின்னல் பற்றியும் புகழ்பெற்ற ஆராய்ச்சிகளை செய்து இடி தாங்கியையும், வெள்ளெழுத்தக் கண்ணாடியையும்(bifocal glasses) மற்ற பல கருவிகளையும் கண்டுபிடித்தவர்.

அரசியலில் சட்டமன்ற உறுப்பினராக, அரசதந்திரியாக, பிரான்சுக்கான தூதராக விளங்கியவர். அமெரிக்க சுதந்திர பிரகடணத்தை தயார் செய்து கையெழுத்திட்ட மூவரில் ஒருவர்.



☑ 1706 ஆம் ஆண்டு ஜனவரி 17-ஆம் நாள் அமெரிக்காவின் பாஸ்டன் நகரில் பிறந்தார் பிராங்கிளின்[.

மொத்தம் 17 பிள்ளைகளில் பத்தாவதாக

பிறந்தவர் அவர். அவரது தந்தையார் சோப்பு, மெழுகுவர்த்திகளைத் தாயரித்து விற்பனை செய்வார்.

பெரிய குடும்பம் என்பதால் குடும்ப ஏழ்மையின் காரணமாக பிராங்கிளினை பள்ளிக்கு அனுப்ப இயலவில்லை.

ஓராண்டுக்கும் குறைவாகவே பள்ளி சென்ற பிராங்க்ளின் தனது ஏழாவது வயதிலேயே கவிதைகள் எழுதத் தொடங்கினார்.

பள்ளிக்கு செல்லாவிட்டாலும் தன் தந்தையின் தொழிலில் உதவி செய்துகொண்டே தனக்குக் கிடைத்த நேரத்தில் அவர் நான்கு மொழிகளைக் கற்றுக்கொண்டார்

## எழுத்தும் அச்சுத்தொழிலும்

பிராங்கிளினுக்கு இயற்கையிலேயே நூல்கள் வாசிப்பதில் ஈடுபாடு இருந்தது.

அந்த அவருடைய பண்புதான் பிற்காலத்தில் அமெரிக்காவின் சுதந்திர பிரகடனத்தை எழுதும் வீரியத்தை அவருக்கு தந்தது.

வாசிப்பதில் இருந்த ஆர்வம் காரணமாகவே அவர் தனது சகோதரர் ஜேம்ஸின் அச்சுக்கூடத்தில் வேலைக்குச் சேர்ந்தார்.

அங்கு அச்சுப் பணிகளைக் கற்றுக்கொண்டதோடு அச்சுக்கு வரும் அத்தனை புத்தகங்களையும் படித்துத் தீர்த்து ஆனந்தம் அடைவார். நிறைய வாசித்ததால் எழுதும் திறமையும் அவருக்கு இருந்தது.

பிறகு தனது சகோதரருடன் ஏற்பட்ட மனத்தாங்கல் காரணமாக அவர் வீட்டை விட்டு வெளியேறி பிலடெல்பியா சென்றார்.

அங்கும் அச்சுத்தொழிலில் ஈடுபட்டு சொந்தமாக அச்சு நிறுவனத்தைத் தொடங்கினார்.

அமெரிக்க இதழ்களில் நிறைய எழுதினார். அவரது புகழ் நாடு முழுவதும் பரவத் தொடங்கியது.

## இதழியலாளர்

1720 ஆம் ஆண்டு 'பென்சில்வேனியா கெசட்' {Pennsylvania Gazette} என்ற இதழை விலைக்கு வாங்கி அதன் பொறுப்பை ஏற்றுக்கொண்டார்

பிராங்கிளின். நான்கு ஆண்டுகள் கழித்து 'புவர் ரிச்சர்ட்ஸ் அல்மனாக்'(Poor Richard's Almanack) என்ற இதழைத் தொடங்கினார்.

மிகவும் மாறுபட்ட பாணியில் வெளிவந்த அந்த இதழ்தான் அவருக்கு செல்வத்தையும், பெரும் புகழையும் கொண்டு வந்து சேர்த்தது.[7]

## கண்டுபிடிப்பாளர் - **அறிவியல்**

அச்சுத்துறையில் புதுமைகள் செய்த அதே வேளையில் புதிதாக எதையாவது கண்டுபிடிக்க வேண்டும் என்ற ஆர்வமும் அவரிடம் இருந்தது.

குறைவான எரி சாதனத்துடன் மிகுந்த வெப்பம் தரக்கூடிய அடுப்பை அவர் கண்டுபிடித்தார்.

அவற்றைத் தயாரித்து விற்கவும் தொடங்கினார். பயிர்களுக்கு செயற்கை உரமிட்டால் அவை செழிப்பாக வளரும் என்று எடுத்துக் கூறினார்.

ஆரம்பத்தில் புறக்கனிக்கப்பட்டாலும் அதிலிருந்த உண்மையை உலகம் மெதுவாக புரிந்து கொண்டது. இப்போதுகூட உலகம் முழுவதும் செயற்கை உரம் பயன்படுத்தப்படுகிறது.

மின்சாரத்தின் மீது ஆய்வுகள் செய்தவர்

மின்னலில் கூட மின்சக்தி இருக்கிறது என்பதை கண்டறிந்தார்.

கூரிய முனைகளால் மின்சாரம் ஈர்க்கப்படுகிறது அதேபோல் மின்னலும் கூரிய முனைகளால் ஈர்க்கப்படும் என்பதை பட்டம் ஆய்வின் மூலம் நிரூபித்தார்.

மின்னல் இடியிலிருந்து கட்டிடங்களைப் பாதுகாக்க இடிதாங்கியைக் கண்டுபிடித்தார்.

முதியவர்கள் எட்டப் பார்வைக்கும், கிட்டப் பார்வைக்கும் சேர்த்து அனியும் ஒரே கண்ணாடியான வெள்ளெழுத்துக் கண்ணாடி (bifocal lens) பிராங்கினின் கண்டுபிடிப்பாகும்.

தன் கண்டுபிடிப்புக்கெல்லாம் அவர் காப்புரிமை பெற்றதில்லை. மற்றவர்களின் கண்டுபிடிப்புகளால் நாம் பயன்பெறும்போது நமது கண்டுபிடிப்பால் பிறர் பயன்பெறுவதை நாம் நற்பேறாகக் கருத வேண்டும் என்பதே அவரது எண்ணம்."

## பிற துறைகள்

அறிவியல் துறையில் பெரிய பங்களிப்பைச் செய்த அவர் காகிதப் பணத்தின் இன்றியமையாமையை எடுத்துக்கூறி அதன் புழக்கத்தை அதிகரிக்கச் செய்தார்

சந்தா முறையில் (subscription) நூல்களை வாங்கி படிக்கும் முறையை உலகுக்கு அறிமுகம் செய்தார்.

பிலடெல்பியாவின் தபால் துறையின் பல மாற்றங்களை செய்து தற்கால தபால் துறை பின்பற்றும் பல கொள்கைகளை உருவாக்கித் தந்தார்.

1730-ஆம் ஆண்டு நடமாடும் நூல் நிலையம் என்ற அற்புத திட்டத்தை உலகுக்கு அறிமுகம் செய்தார்

அதனைத் தொடர்ந்து அமெரிக்காவின் முதல் தீ காப்பீட்டு நிறுவனத்தை அவர் உருவாக்கினார்.

ஒரு கல்விக் கழகத்தை நிறுவ வேண்டும் என்று அவர் கனவு கண்டார். அவரது காலகட்டத்திலேயே அந்தக் கனவு நனவானது.


இன்று உலகப் புகழ்பெற்ற அமெரிக்கப் பல்கலைக்கழகங்களுள் ஒன்றான பென்சில்வேனியா பல்கலைக்கழகம் அவர் நிறுவியதுதான். 1749-ஆம் ஆண்டு அது நிறுவப்பட்டது.

அடுத்த இரண்டு ஆண்டுகள் கழித்து அமெரிக்காவின் முதல் மருத்துவமனையைத் தோற்றுவித்தார் பிராங்கிளின்.

## அரசியல்

பிராங்கிளின் சிறந்த சிந்தனையாளர், நேர்மையானவர் என்பதால் அவரை பயன்படுத்திக்கொள்ள விரும்பியது அரசு

அவரும் சட்டமன்ற உறுப்பினர், அரசதந்திரி, தூதர் என பல்வேறு நிலைகளில் அரசியல் பணி புரிந்தார்




இங்கிலாந்தின் காலனித்துவ ஆட்சியில் அடிமைப்பட்டு கிடந்த அமெரிக்காவுக்கு சுதந்திரம் பெற்றுத்தர அவர் தன் அரசியலறிவைப் பயன்படுத்தி பிரான்சின் உதவியைப் பெற்றார்.

அவர்மேல் பெரும் மதிப்புக் கொண்டிருந்த பிரான்சும் அமெரிக்காவுக்கு உதவ முன்வரவே இங்கிலாந்து பணிந்தது; அமெரிக்காவுக்கு சுதந்திரம் கிடைத்தது.

1789 ஆம் ஆண்டு அமெரிக்காவின் முதல் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்ட ஜார்ஜ் வாஷிங்டன் அமெரிக்காவின் அரசியல் சட்டத்தை இயற்றும் மாபெரும் பொறுப்பை பெஞ்சமின் பிராங்கிளினை உள்ளடக்கிய ஒரு குழுவிடம் ஒப்படைத்தார்.

அவரது மேற்பார்வையில் உருவான அரசியல் சட்டம்தான் இன்றும் அமெரிக்காவை வழிநடத்துகிறது.

## சிறப்பு

சுதந்திரம் அடைந்த பிறகு அமெரிக்கா முதன் முதலாக இரண்டு அஞ்சல் தலையை வெளியிட்டது.

ஒன்றில் அமெரிக்காவின் முதல் அதிபரான ஜார்ஜ் வாஷிங்டனின் படம். மற்றொன்றில் பெஞ்சமின் பிராங்கிளினின் படம் இடம்பெற்றிருந்தது.

### மறைவு

பிராங்கிளின் 1790 ஆம் ஆண்டு ஏப்ரல் 17-ஆம் தேதி தனது 84 ஆவது வயதில் காலமானார்.

அரசாங்க மரியாதையுடன் அவரது உடல் அடக்கம் செய்யப்பட்டது. சுமார் இருபதாயிரம் பேர் அவருக்கு இறுதி மரியாதை செலுத்தினர்.

## வேதாத்திரி மகரிசி வாழ்க்கை குறிப்பு (கி.பி.1911-2006)

அருட்தந்தை வேதாத்திரி மகரிஷி கூடுவாஞ்சேரி என்னும் கிராமத்தில் நெசவுத் தொழில் செய்யும் வரதப்பன், முருகம்மாள் (சின்னம்மாள்) தம்பதியர்களுக்கு எட்டாவது குழந்தையாகப் பிறந்தார்.

சிறுவயது முதலே வேதாத்திரி மகரிஷி அவரது தாயார் சின்னம்மாளிடம் நிறைய பக்தி கதைகளையும், புராணக் கதைகளையும் அறிந்து கொண்டார்.



இவரது குடும்பசூழல், இவருக்கு அதிகம் படிக்க வாய்ப்பு இல்லாமல் போய்விட்டது.

தன்னுடைய சொந்த ஊரில் மூன்றாவது வகுப்பு வரை படித்த இவர், பின்னர் தங்கள் குடும்ப தொழிலான தறி நெய்தலை செய்யத் தொடங்கினார்.

18வது வயதில் சென்னையில் தனியார் நிறுவனம் ஒன்றில் பணியாற்றும் வாய்ப்பு இவருக்கு ஏற்பட்டது.

சென்னையில் இவருக்கு ஆயுர்வேத மருத்துவர் எஸ். கிருஷ்ணாராவின் நட்பு கிடைக்க, அவர் மூலமாக தியானம், யோகா போன்றவைகளை கற்றார் மகரிஷி.

தனது வாழ்க்கையின் குறிக்கோளாகிய முழுமையை உணரும் நோக்கத்தால் உந்தப்பட்டு; சித்த, ஆயுர்வேத மற்றும் ஹோமியோபதி போன்ற மருத்துவ துறைகளைக் கற்று தேர்ச்சிப் பெற்றார்.

மேலும் இரண்டாவது உலகப் போரின் போது முதலுதவிப் பயிற்சியாளராகவும் பணிபுரிந்தார்.

பின்பு பொருளாதாரத் தன்னிறைவு பெற வேண்டும் என்று, தனது சுய முயற்சியினால் பல்லாயிரம் நபர்களுக்கு வேலை அளிக்கக்கூடிய அளவிற்கு ஒரு பெரிய நெசவுத் தொழிற்சாலையை உருவாக்கினார்.

## ஆன்மிகத் தேடல்

தனது சகோதரியின் மகளை (லோகாம்பாள்) மணந்து இல்லற வாழ்க்கையைத் தொடங்கினார்.

இல்லறத்திலும், நெசவுத் தொழிலிலும் ஈடுபாடு அதிகமிருந்த போதிலும் தனது ஆன்மீகத்தேடலில் மிகுந்த ஆர்வத்துடன் நாட்டம் கொண்டிருந்தார்.

சித்தர்களின் நூல்களைக் கற்று, தியானத்தில் வெகுவாக ஈடுபட்டு தன்னை அறிதல் என்ற அகத்தாய்வு முறையில் விடாமுயற்சியுடன் ஈடுபட்டார்.


இவரது ஆழ்ந்த ஆன்மீகத் தேடலின் விளைவாக தனது 35வது வயதில் ஞானம் பெற்றார்.

அதிலிருந்து அடுத்த 15 ஆண்டுகளில்- பல உன்னதமான ஆன்மீகக் கருத்துக்களை- தனது எழுத்துக்களின் மூலமாகவும், உரைகளின் மூலமாகவும் மக்களுக்கு எடுத்துரைத்தார்.

பின்னர்- தனது நெசவு தொழிலை முற்றிலும் விட்டு விட்டு- தன்னை முழுமையாக ஆன்மீகத் துறையில் ஈடுபடுத்திக் கொண்டார்.

## நூல்கள் இயற்றல்

இந்தப்  பிரபஞ்சத்தைப் பற்றியும்- மனித வாழ்க்கையைப் பற்றியும்- தவநிலையில்- தான் பெற்ற கருத்துக்களை -பல கவிகளாகவும், கட்டுரைகளாகவும்- புத்தக வடிவங்களில் இந்த உலகுக்கு மகரிஷி அவர்கள் அளித்துள்ளார்கள்.



இரண்டாயிரத்திற்கும் மேற்பட்ட- விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும் கலந்த- தமிழ்ப்பாடல்களை இயற்றியிருக்கிறார்.

பாமர மக்களும் புரிந்து கொள்ளும் வகையில்- எளிய தமிழில் தனது தத்துவங்களை எடுத்துரைத்தார்.

எல்லா மதங்களின் சாரம் ஒன்றே என்பதை -மகரிஷி அவர்கள் வலியுறுத்துகிறார்.

1957ல் மகரிஷி 'உலக சமாதானம்' என்னும் நூல் ஒன்றை வெளியிட்டார்.

தொடர்ந்து பல்வேறு நாடுகளுக்கு செல்லும் வாய்ப்பு- இவருக்கு கிட்ட - அங்கெல்லாம் ஆன்மீகச் சொற்பொழிவு நிகழ்த்தினார்.

மனிதகுலம் அமைதியாக வாழ ஏற்ற கருத்துகளையும் சாதனை முறைகளையும் உலகமெங்கும் பரப்பிட- 1958-ஆம் ஆண்டில் -வேதாத்திரி மகரிஷி அவர்கள் நிறுவிய உலக சமுதாய சேவா சங்கம்- இன்று இந்தியாவிலும், மலேசியா, ஜப்பான், தென்கொரியா, அமெரிக்கா, போன்ற நாடுகளிலும் பல கிளைகளைக் கொண்டு இயங்கி வருகிறது.

## அருட்பெருஞ்சோதி நகர்

கொங்கு நாட்டில்- பொள்ளாச்சி நகருக்கு அருகே- வால்பாறை மலையோரத்தில்- ஆழியாறு நீர்த்தேக்கம் அமைந்துள்ள இடத்தில்- அருட்பெருஞ்ஜோதி நகர் எனும் நகரம்- வேதாத்திரி மகரிஷியால் 1984 கால கட்டத்தில் அமைக்கப்பட்டது.

அன்பொளி என்னும் -ஆன்மீக இதழ் ஒன்றையும் வெளியிட்டார். இன்றும் தமிழ், ஆங்கிலம் மொழிகளில் வெளிவருகின்றன.

## மறைவு

வேதாத்திரி அவர்கள் தனது 95வது வயதில் மார்ச் 28, 2006 செவ்வாய்க்கிழமையன்று மறைந்தார்.

## பிராங்களினும் வேதாத்திரி மகரிசியும்




பெஞ்சமின் பிராங்கிளின் உதிர்த்த பல பொன்மொழிகளை இன்றும் பல பேச்சாளர்கள் அடிக்கடி பயன்படுத்துகின்றனர்.

“

"இறந்த பிறகும் நீங்கள் மறக்கப்படாமல் இருக்க வேண்டுமென்றால்; ஒன்று சிறந்த படைப்புகளை எழுதுங்கள் அல்லது பிறர் உங்களைப் பற்றி எழுதும் அளவுக்கு ஓர் அர்த்தமுள்ள வாழ்க்கை வாழுங்கள்"

"வாழ்க வையகம் வாழ்க வளமுடன்" என்ற வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகளை இன்று பலரும் உபயோகிப்பதை பார்க்கின்றோம்.

## அரசியல் சரித்திமும் சிறந்த ஆட்சியும்

""அரசாங்கங்களும் அரசர்களும் செய்த பிழைகள் நிறைய சரித்திரத்தில் மலிந்திருகின்றன" என்பார் பிராங்களின்.

சிறந்த ஆட்சி எப்படி இருக்க வேண்டும்? வேதாத்திரியம் சொல்கிறது.

"இலாபமென்ற ஒன்றேதான் தனியார் செய்யும்

எத்தொழி லும் உள்ள குறிக்கோள் ஆகும்.

இராபத்திற் கே மக்கள் உடல்உள் ளம்

எந்தஅளவும் கெடுக்கும் கொடுமை யாகும்.

இலாபநட்டம் பொதுமக்கள் அனுப விக்கும்

இன்பதுன்பம் எனக்கணிக்கும் ஆட்சி காண்போம்.

இலாபத்தில் நட்டத்தில் மனிதர் எல்லாம்

இணைந்தஒரு கூட்டுறவே சிறந்த ஆட்சி," (ஞாக.123)

## ஒரே மதம் ஒரே மதம்

"அறிஞர்கள் அனைவரும் ஒரே மதத்தைத்தான் சேர்ந்தவர்களாயிருக்கிறார்கள்" என்றார் அறிஞர். அங்கிருந்த பெண்மணி ஒருத்தி "அது என்ன மதம்?" என்று கேட்டாள். அதற்கு அறிஞர் உடனே, "அறிவாளிகள் வாய்திறந்து

சொல்வதில்லை அம்மணி!" என்று பதிலளித்தார்" என்பார் பிராங்களின்.

" மதம் ஒன்று போதும்" என்கிறார் அருள்தந்தை வேதாத்திரி மகரிசி..

கேள்வி: சுவாமிஜி, தாங்கள் எந்த மதத்தை சேர்ந்தவர்?

வேதாத்திரி மகரிசியின் பதில்

- " நான் எந்த மதத்தையும் சேர்ந்தவன் அல்ல. உலகப் பொது அருள்நெறி சமயத்தைச் சேர்ந்தவன். கர்மயோக நெறியே அதன் வேதமாகும். மனிதன் உடல் நலம், மனநலம் காத்து செயல் விளைவை மதித்து எவ்வுயிர்க்கும் துன்பம் இழைக்காமல் வாழ்வதே கர்மயோக நெறியாகும். **இந்து மதத்திலுள்ள நம்பிக்கை, இஸ்லாமிய மதத்தில் உள்ள தொழுகை முறை, கிறிஸ்துவ மதத்தில் உள்ள தொண்டு, புத்த மதத்தில் உள்ள ஆராய்ச்சி, ஜைன மதத்தில் உள்ள ஜீவகாருண்யம்** இவை எல்லாம் எனக்குப் பிடிக்கும்."(5)

"உலகப் பொது அருள்நெறி சமயம் என்பது கர்மயோகம்.

## ஒரே கடவுள் ஒரே கடவுள்

"ஒரே கடவுள்தான் உண்டு. அறிவின் ஊற்று நீர்வீச்சுதான் கடவுள். மனிதர்களுக்கு நல்லது செய்வது தான் கடவுளுக்குச் செய்யும் மிகமிக நல்ல தொண்டாகும். போற்றுதலாலும், ஸதுதியாலும், நன்றியுணர்ச்சியாலும் அவரை வழிபடலாம். கடவுள் தன் நற்கருணையால் இந்த உலகத்தை ஆளுகிறார்" என்பார் பிராங்களின்.

"அறிவேதான் தெய்வம்" என்றும், ஒரே கடவுள் என்பதையும் வேதாத்திரி ஆணித்தரமாக மானுடத்தில் விதைத்தவர்.

## ஆன்மா என்பது பிரபஞ்சத்தின் ஒளியல்லவா?"

**ஆன்மா என்றால் என்ன ?**

" ஆத்மா அழியாதது" என்பார் பிராங்களின்.

**வேதாத்திரி மிகவும் எளிமையாக விளக்கம் தருகிறார்.**

**"1. தூல உடலுக்கு மையமான விந்து நாதம்**
**2. சூக்கும உடலுக்கு மூலமான உயிர்த் துகள்கள்**
**3. காரண உடலுக்கு மூலமான சீவகாந்தம்.**
**இவை மூன்றும் இணைந்தது தான் கருமையம் ஆகும்.**
**உயிரினத்தின் பெருமையும் சிறப்பும் இந்தக் கருமையத்தில் தான் அமைந்துள்ளது என்று உணர்த்துகிறார்.**

**மேலும் உயிர் மையத்துள் அமைந்துள்ள அறிவானது உயிரின் சுழற்சியால் எழும் விரிவலையான காந்த அலை மூலம் புலன்கள் வழியாகப் பொருளோடு தொடர்பு கொள்ளும்போது அந்த அறிவையே மனம் என்கிறோம் என்றும்.**

**அகம் என்பதும்-நெஞ்சம் என்பதும்- உள்ளம் என்பதும் ஆன்மா என்பதும் கருமையத்தை குறிக்கும் என்று மனிதன் உடலாலும்-மனத்தாலும் செய்யும் செயல்கள் அனைத்தும் பதிவாகி- வித்தில் மரம்போல் இருப்பு வைக்கப்படும் இடம் கருமையம்"**
**(3)என்று தெளிவாக மகரிசி அவர்கள் விளக்கியுள்ளார்கள்.**

**"ஆன்மா என்பது பிரபஞ்சத்தின் ஒளியல்லவா?" என்று வியக்கிறார் சுவாமி விவோகனந்தர்.**

## பணம் (பொருளாதாரம்)

"பணத்தின் மதிப்பு உனக்குத் தெரிய வேண்டுமென்றால் எங்கேயாவது போய் கொஞ்சம் கடன் வாங்கிப்பார்!" என்பார் பிராங்களின்.

உழைப்பின் மதிப்பே பணம் என்பார் வேதாத்திரி மகரிசி

"பணம்என் ற அரணுக்குள் பொருள்கள் வந்து

பதுங்கிப் பின் வெளியேறும் முறை ஒன்றாலே

பணத்தைக் கொண் டேலாபம் பெருக்கித் துய்க்கும்

பயனற்ற நிர்வாகம் விரிந்து போச்சு.

பணம்தீமை பயக்காமல் காக்க, எங்கும்

பண்டங்கள் கூட்டுறவில் தோற்று விப்போம்.

பணத்தேவை நாளுக்கு நாள் குறைந்தால்

பாட்டாளிக் கே சிறப்பும் உயர்வும் கிட்டும்." (ஞாக.33)

## கடன் என்ற புண்

""நீ கடன் வாங்குகிறாய் என்றால், உன் சுதந்திரத்தின் மீது இன்னொரு சக்திக்கு ஆதிக்கம் கொடுக்கிறாய் என்றுதான்அர்த்தம்" என்றும் ---" கடனில் கண் விழித்து எழுவதைவிட, இராப்பட்டினியுடன் படுக்கப்போவது நல்லது" என்றும் பிராங்களின் சொல்லுகிறார்.

கடனின் விளைவு ஒழிய என்ன செய்ய வேண்டும்? வேதாத்திரியம் விடை தருகிறது.

"தொடர்ந்துவரும் சமுதாய வாழ்வுஎன்னும்

உடலினிலே தோற்றமாகி,

படர்ந்துவரும் செல்வநிலை சீர்கேடு

பலமுடைய நீடித்த வியாதி யாகும்.

கடன் என்ற புண்ணாகி,

வட்டிஎனும் சீழ்பி டித்துப் புரையும் ஓடி,

படமுடியா துயராச்சு! பகுத்தறிவும், பொதுஉடைமைக்

கொள்கையுமே இந்நோய்க்கு நல் மருந்தாம்." (ஞாக.80)

## உழைப்பு உழைப்பு உழைப்பு

"உழைப்பின்றி பலர் தங்கள் புத்தி சாமர்த்தியம் ஒன்றினாலே வாழ்ந்து கொண்டிருக்கலாம். ஆனால் சேமிப்புத் தேவையினால் அவர்கள் வாழ்க்கை உடைந்து போகிறது" என்றும்---"முழங்கால் மண்டியிட்டிருக்கும் கனவானைவிடக் கால் நிமிர்ந்து நிற்கும் உழவன் உயர்ந்தவன்" என்றும் பிராங்களின் சொல்லுகிறார்.

"உழைப்பும் உறிஞ்சுதலும்" வேதாத்திரி என்ன சொல்கிறார்?

"உழைக்கின்ற  தொழில்மூலம் பலர் பிழைக்க,

உறிஞ்சுகின்ற தொழிலமூலம் சிலர் பிழைத்தால்,

உழைப்போர்க்கு வறுமைமிகும். உறிஞ்சு வோர்க்கு

உழைப்பாளர் பலன்கூடி செலவம் சேரும்.

உழைப்பாளர் செலவர்க்கே அடிமை ஆகி

உளக்களிப்பை ஊட்டும் தொழில் பலவா ஆகிற்று.

உழைப்பாளர் சிலர்ஆக்கத் தொழிலைச் செய்ய

உறிஞ்சுவோர்க்கு உதவும் தொழில் பலர்செய் கின்றார்."(ஞாக.121)

## வறுமையற்ற வாழ்வுக்கு பேரறிஞர் கடமை

என்ன "பெரும்பாலும் வறுமைதான் மனிதனிடமுள்ள ஜீவனையும் பண்புகள் அனைத்தையும் தின்று விடுகிறது" என்பார் பிராங்களின்.

வறுமை தீர்ந்தாத எனக் கேட்கிறார் வேதாத்திரி மகரிசி?

"வறுமையைப் பொறுத்திட

வல்லவரோ எல்லோரும்?

பொறுமைதான் கொண்டாலும்

பொறுக்குமோ உடல் குடும்பம்?

சிறுமை பிறர்பால் பேசிச்

சீறும்ஆட்சி நடிகர்களே!

பெறுகின்றீர் கை தட்டல்!

பிறபட்டோர்க் கென் செய்தீர்?" (ஞாக.140)

வறுமையற்ற வாழ்வு வேண்டும் என்கிறார் வேதாத்திரி மகரிசி.

"வறுமை எனும்கொடுந் துன்பம் வாராது,

வளவாழ்வு பெறதற்கு ஓரலகப் பேரரசு வரவேண்டும்." (ஞாக.145)

வறுமையற்ற வாழ்வுக்கு பேரறிஞர் கடமை என்ன?

"வறுமையிலே வாடிடுவோர் வயிற்றுப்பசித் துன்பம்.

வழிவழியாய் தொடர்குடும்ப உறுப்பினர்கள் துன்பம்,

பொறுமைகொள்ள முடியாது அவர்கள்மனம் நிலைத்து,

பொதுநலமும், ஒழுக்கம்எனும் புனிதக்கட்டுப் பாடும்

வெறுமையென்ற வெள்ளத்தில் வீழந்தாலென் னாகும்?

வேண்டாத துன்பங்கள் விளைவ தோடு, உளநோய்கள்

பெறும்மனித சமுதாயம். பிச்சைநோய், திருட்டு,

பிழையான செயல்பலவாம் பேரறிஞர் கடமை என்ன?" (ஞாக.180)

## அறிவு - அறிவிலே தெய்வம்

"ஆராய்ந்து அறியும் அறிவுத் தேவிக்கு நீ காது கொடுத்துக் கேட்காவிடில், அவள் உன் முழங்கால் முட்டியை உடைத்து விடுவாள்" என்பார் பென்ஞமின் பிராங்களின்

"வெளிச்சத்திலே இருள் நிறைந்திருப்பதுபோல அறிவிலே தெய்வம் என்ற நிலை இருக்கின்றது" என்றும்

"மனிதனுடைய அறிவானது பிரபஞ்சத்திற்கு ஆதிபொருளாக உள்ள தெய்வநிலை" என்பார் வேதாத்திரி மகரிசி.

## ஆசை- ஆசையை சீரமையுங்கள்

"முதலாவது ஆசையைப் பின்தொடர்ந்து வரும் மற்ற ஆசைகளையெல்லாம் நீ திருப்தி செய்வதை விட, முதலாவது ஆசையை அடக்கிவிடுவது உனக்குச் சுலபமாயிருக்கும்" என்பார் பென்ஞமின் பிராங்களின்

வேதாத்திரி மகரிசி. "ஆசை என்பது இயற்கையே...அதை சீரமையுங்கள்" என்பார்

"இச்சை என்பது இயற்கை எழுச்சியே

இச்சிப்பதே ருசு இயங்கும் உடலுக்கு

இச்சித்து, அனுபவித்து, இச்சசை ஒழுங்குறும்

இச்சை ஒழித்திட ஏன் முயல்கின்றீர்கள்?

இச்சை எழுந்திடக் காரணம் கண்டிடு,

இச்சை முடித்திடச் சூழ்நிலை பார்த்திடு.

இச்சை நுகர்ந்திட பின் வினை வெண்ணிடு,

இச்சை பிறந்தது போல இறந்திடும்!" (ஞாக.1560)

## அகம்பாவம்- ஆணவம் ஏழாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?

"ஆசையைப் போலவே மமதையும் உரக்கச் சப்தமிடும் ஒரு

பிச்சைக்காரனைப் போன்றது தான். இன்னும் அதிகக் குறும்பானதுங் கூட" என்றும்......

"அகம்பாவத்தைப் போல் நம் சுபாவ வெறிகளில் அடக்குவதற்குக் கடடினமானது வேறு எதுவுமில்லை. அதை மறையுங்கள். அதனோடு போராடுங்கள். அதை அடித்து அடக்கிக் கொல்லுங்கள். அப்போதும் அதை உயிருடன் மெல்லத் தலை நீட்டி எட்டிப்பார்க்கும்" என்பார் பிராங்களின்.

ஆணவம் ஏழாமல் இருக்க என்ன செய்ய வேண்டும்?
வேதாத்திரியம் விடை தருகிறது.

நான் உடல் என்று குறுகி நிற்பதா? நான் மனம் என்று விரிந்து நிற்பதா? நான் உயிர் (ஆன்மா) என்று உயர்ந்து நிற்பதா? நான் பிரம்மம் என்று உணர்ந்து, முழுதுணர்ந்து நிற்பதா?

குறுகி நின்றால் விரிவு இல்லை. விரிந்து நின்றால் குறுக்கமும் விரிவும் மட்டும் தான் உண்டு, உயர்வு இல்லை.

உயர்ந்து நின்றால் விரிவும் உயர்வும் மட்டுந்தான் உண்டு; உணர்வு, முழுதுணர்வு இல்லை.

உணர்ந்து நின்றால் இவை அனைத்தும் உண்டு. உடல் தோற்றமாக இருக்கிறது. உயிர் ஆற்றலாக இருக்கிறது.

மனம் உணர்வாக இருக்கிறது. மனம் தான் நான் எனில் மனம் என்ற ஒன்று தனியாக இல்லையே! உயிர்தானே மனம் என மறுபெயர் பெற்றிருக்கிறது.

உயிரோ அணுக்கூட்டம். அணுவோ பிரம்மத்தின் இயக்க நிலை. எனவே, நான் பிரம்மம் என்பது தெளிவாகிறது.

நான் என்ற ஆராய்ச்சி இறையுணர்வில் முடியும். இறைநிலை

உணர்ந்த தெளிவில்தான் ஆசை ஒழுங்குறும்.

எது எல்லாவற்றிற்கும் பெரியதோ, எதை விடப் பெரிது வேறொன்றும் இல்லையோ, அதுவே நானாக இருக்கும் போது அந்நிலை உணர்ந்த தெளிவில் தான் இருக்கும் போது எனக்கு அது வேண்டும், இது வேண்டும் என்று அவா எழ இடம் எது?

என்னை உடலளவில் குறுக்கிக் கொண்டிருந்தபோது எதெதனோடோ என்னை ஒப்பிட்டுக் கொண்டேன்.

அப்போது நான் பெரியவன், நான் வல்லவன், நான் செல்வன், நான் அழகன் என்றெல்லாம் தருக்கு வந்தது.

ஒப்புவமையில்லாத ஒரு பெரிய பொருளாக நானே இருக்கும் நிலையை உணர்ந்து கொண்டு விட்ட போது எதனோடு என்னை ஒப்பிட்டுத் தருக்குவது? ஆணவம் எழக் காரணமே இல்லாமலல்லவா போய் விடுகிறது.

நானே பிரம்மம் ஆக இருக்கிறேன், பிரம்மம் எல்லாமாக இருக்கிறது என்னும்போது, எல்லாமே நானாக இருக்கும் நிலையையும், நானே எல்லாமாக இருக்கும் நிலையையும் நான் உணர்ந்து மறவாமல் இருக்கும் போது, எதன் மீது பற்று வைப்பது?

என்னுடையது என்ற பற்று எழ முகாந்திரமே இல்லையே! நான் இன்னும் அகங்காரமும் எனது என்னும் மமகாரமும் ஒருங்கே ஒழியும் இடம் நான் யார்? நான் பிரம்மம் என்ற தெளிவுதான்- என்பார் -- யோகிராஜ் வேதாத்திரி மகரிஷி.

மேற்கிலும் கிழக்கிலும் தோன்றிய மாபெரும் சிந்தனையாளர்கள் பென்ஞ்சமின் பிராங்களின் வேதாத்திரி மகரிசி சிந்தனைகளை ஏற்போம். அவர்கள் வழியில் ஆனந்தமாகப் பயணிப்போமாக.

## துணைநின்ற நூல்கள்


1. ஞானக்களஞ்சியம், வேதாத்திரி மகரிசி
2. அன்பொளி மாத இதழ்கள், வேதாத்திரி மகரிசி
3. மாக்கோலமாய் விளைந்த மதிவிருந்து.
4. உலகசமாதானம், வேதாத்திரி மகரிசி.
5. வேதாத்திரி மகரிசியின் பொன்மொழிகள் 5000- அருள்நிதி மன்னார்குடி பானுகுமார்
6. Benjamin Franklin: by Walter Isaacson
7. **The Autobiography of Benjamin Franklin-**Benjamin Franklin
8. **Fart Proudly: Writings of Benjamin Franklin You Never Read in School-**Benjamin Franklin
9. **The Hatmaker's Sign**Benjamin Franklinயய


வாழ்கவளமுடன். "VETHATHIRIAM BANUKUMAR" என்ற தலைப்பில் YOUTUBE-ல் கீழ்க்கண்ட தலைப்புகளில் சிந்தனைகளைப் பகிர்ந்துள்ளோம். வாய்ப்புள்ளவர்கள் பயன்பெற்று இன்புறலாம்.

# வேதாத்திரிய சிந்தனைகள்

1. மூடன் மடையன் முட்டாள் https://youtu.be/lV43Tcl4Ouo
2. இன்ப ஊற்றுப் பெருக https://youtu.be/wQWEn2PZXSg
3. மக்கட்பேறு ஏன் இல்லை https://youtu.be/6AZbuTKKc88
4. ஊரல் உரசல் உறத்தல் ஒழுக்கம் https://youtu.be/ZVzjfEFqbxY
5. மேல் பதிவு https://youtu.be/iCOz89_L8uA
6. புயல்காற்றில் கூட தத்துவம் https://youtu.be/VT1eCTf5M1Q
7. வாழ்க்கை முறை https://youtu.be/iIoEaE2SQng
8. நான் யார்? https://youtu.be/rYHj5_tx8t4
9. அன்பும் அறிவும் https://youtu.be/11xogYcGdk0
10. மெய்யும்பொய்யும் அறிதற்கு எளியது https://youtu.be/ktTwxcir8D8

11. பிறவியின் நோக்கம் எப்போது நிறைவேறும்?
https://youtu.be/bGCEEX_vAFk
12. இறைநிலையின் இன்ப ஊற்று https://youtu.be/QVB0RSM8yjI
13. கைரேகை.....மச்சம்...... https://youtu.be/450c-u-wbZc
14. வாழையடி வாழையென வந்த வள்ளல்கள்
https://youtu.be/0mmAEIcL6vo
15. சினம் எழாத மனம் https://youtu.be/lYWmT5_F_g0
16. தவத்தில் சீர்திருத்தம் https://youtu.be/loBcRcrjOLc
17. திருமணத்தில் சீர்திருத்தம் https://youtu.be/DW6IOtQ1P4k
18. பாலுணர்வில் சீர்திருத்தம் https://youtu.be/iBiXaZsmeHY
19. பெருமையாக? புகழா https://youtu.be/tSQ11G6WAnA
20. ஆன்மீக விழிப்பு வேண்டும்? https://youtu.be/ncGnEgJqDIM
21. ஞானத்தை பெறுவது எப்போது? https://youtu.be/uUkWs7XXQJc
22. மனவளக்கலையின் மேன்மை https://youtu.be/DIrU3ODA6_g
23. எனது கரைந்தால் தொண்டு https://youtu.be/RhW6P1XcxXU
24. பெற்றோர் வினைத் தொடர் குழந்தைகளா? https://youtu.be/_-Ux9Z33h74
25. குடும்ப வாழ்க்கையும் குண்டலினி யோகமும்
https://youtu.be/x0wac_osRNM
26. தனித்திரு பசித்திரு விழித்திரு https://youtu.be/nI3jmx8CL2Y
27. வடக்கில் தலை வைக்கலாமலா? https://youtu.be/E2SD2jxR3vQ
28. தப்புக் கணக்கிட்டால் https://youtu.be/MTYAISIRFrU
29. நீயே எண்ணத்தின் சிற்பி https://youtu.be/yE9Lcm-k4uU
30. எண்ணம் என்றால் என்ன? https://youtu.be/q9M1-23yCHg
31. சினம் எழாத மனம் https://youtu.be/lYWmT5_F_g0
32. எனக்குத் தத்துவம் புகட்டிய பாடல்கள்?
https://youtu.be/LGx1_3ThDRo
33. நாடி ஜோதிடம் உண்மையா? https://youtu.be/cGwVzxOdib4
இரகசியம் https://youtu.be/T5vtcHtVQxg
34. ஏன் புகைப் பிடிக்கக் கூடாது? https://youtu.be/Q2AsxHdNoms
35. கூர்மையும் நேர்மையும் https://youtu.be/QVB0RSM8yjI
36. மனிதனே தெய்வம் https://youtu.be/SerpiwSfHVw

37. மன ஓட்டம் https://youtu.be/Twgt5cv4iZE
38. சாக்ரட்டீஸ் கேள்விகள் https://youtu.be/n5-RlaZEkQ0
39. பிரார்த்தனை எப்படி இருக்க வேண்டும்? https://youtu.be/pPK0X25Uvfl
40. தமிழ்ச் சித்தர்கள் https://youtu.be/fKf5eEYwWxc
41. இரண்டு பெரிய பொக்கிஷங்கள் https://youtu.be/xZlt3IEvclc
42. கோள்களின் சுழற்சியால் நன்மை தீமை https://youtu.be/ulfqLiQBJD8
43. ஆண்டவன் கணக்கு https://youtu.be/3GTUxvpAlgc
44. பிறப்பிற்கும் இறப்பிற்கும் உள்ள இடைவெளி வேறுபாட்டிற்கான காரணம் என்ன?
https://youtu.be/GI75xVBMzqs
45. உயிர் தோற்றத்தின் காரணம் என்ன?
https://youtu.be/2GKAWuWIAvI
46. கடைவீதி … கடைவீதி ஆன்மீகத்தில் https://youtu.be/MjDbM8XaaV8
47. ஓர் உலகம் ஓர் உலகம் https://youtu.be/Y_Yy0F_Gi4Y
48. உணர்தலும் உறைதலும் https://youtu.be/a6UnvVynNOQ
49. கடமையும் உரிமையும் https://youtu.be/Sqeb31GCbe0
50. ஆளுதலும் ஆட்படுதலும் https://youtu.be/o8ezt911sgc
51. பண்புப் பயிற்றி https://youtu.be/HoflzM8BNwk
52. உள்ளத்தின் சோதனை https://youtu.be/HoflzM8BNwk
53. வணங்குதலும் வாழ்த்துதலும் https://youtu.be/HCj2vPis9kg
54. எதிரிகளை ஏன் வாழ்த்த வேண்டும்? https://youtu.be/YtE5pc7zhy4
55. எண்ணத்தின் வலிமை https://youtu.be/AChn9Joi6yY
56. பல பெயர்களில் பிரம்மம் https://youtu.be/8IehOmxDSnY
57. எதிர்பார்த்தல் ஏமாற்றமே! https://youtu.be/uqySX6CPG4Y
58. இறையை அறிய அறிவை அறி https://youtu.be/jDXCctDnof0
59. முன்பின் பிறவிகள் https://youtu.be/BqcPBmLuyyg
60. கடமையும் நீதியும் https://youtu.be/Qi4bqUguqSA
61. மெய்ஞ்ஞான வாசல் https://youtu.be/dHsE0p6597o
62. வேத சாசனமும் வேதாத்திரிய சாஸ்திரமும்https://youtu.be/fK_csHu7e3Q
63. தன்னிலை விளக்கம் https://youtu.be/85D2rwXUO9U
64. வாழ்த்தும் வாழ்க்கை https://youtu.be/p9nlE_Oj7Gs
65. வேதாத்திரியத்தின் வேராகியது பார்த்தசாரதி மாலை
https://youtu.be/FfvH7lfBx08

66. காதலும் கற்பும் https://youtu.be/6gYxqM6Zq90
67. உனக்கும் ஒரு நாள் https://youtu.be/L7M60z1XWpo
68. வேதாத்திரியின் இறை சிந்தனை https://youtu.be/GPJYGaZ-UvY
69. அருளால் பிறந்த பிள்ளைகள் (ஸ்ரீராமகிருஷ்ணரும் வேதாத்திரி மகரிசியும்) https://youtu.be/wdH9u-KBUBo
70. வேதாத்திரியின் ஞானக்களஞ்சியம் https://youtu.be/lcxyW3wcWUY
71. கால்களைத் தொட்டு வணங்கலாமா? https://youtu.be/juU3rHeXRcg
72. பொறுக்க முடியாமை https://youtu.be/iklaZCjsgGo
73. பகைவன் பதிவை நீக்க வந்த துணைவன் https://youtu.be/Ex5zAG9Tk-I
74. ஒழுக்கம் கடமை ஈகை https://youtu.be/PsN-NHCg1hs
75. இறையை அறிய அறிவை அறி https://youtu.be/jDXCctDnof0
76. எதிர்பார்த்தல் ஏமாற்றம் https://youtu.be/uqySX6CPG4Y
77. குரு தானாக வருவார் https://youtu.be/vFkdh0c2pPE
78. எந்த நேரத்திலும் தியானம் செய்யலாம் https://youtu.be/XtWdSdJUs8c
79. மதம் ……. வேதம்….. https://youtu.be/G1dFWJCiTKM
80. பழக்கமும் விளக்கமும் https://youtu.be/7Pbt6rYA2dg
81. மனவளக்கலை ஒரு பொக்கிஷம் https://youtu.be/9dIh6Afgt1g
82. ஆன்மீக வாழ்வு வாழ்வோம் https://youtu.be/wFt5IMYUH2Q
83. மூலம் காலம் கோளம் சீலம் ஞானம் https://youtu.be/wlesrY8wvmQ
84. ஆடு கொடுத்த சாபம் https://youtu.be/ImulE2rOm78
85. நுண்ணிய நூல்பல கற்பினும் https://youtu.be/GA4eWkqLvtM
86. அருட்தந்தையின் ஆன்மீக விளக்குகள் https://youtu.be/QRAxFA13eMM
87. தவத்தில் சீர்திருத்தம் https://youtu.be/IoBcRcrjOLc
88. கூர்மையும் நேர்மையும் https://youtu.be/QVB0RSM8yjI
89. பெருமையா? புகழா? https://youtu.be/tSQ11G6WAnA
90. வாழ்க வளமுடன் https://youtu.be/e8QI0b8iDNo
91. பாலுணர்ச்சியா? பகுத்தறிவா? https://youtu.be/ivjPaJw3wm8

வாழ்க வையகம் வாழ்க வளமுடன்